தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 96/பேரூ/2023
நாள் 19.05.2023

திரு.S.சுந்தரமூர்த்தி,
வேட்டவலம்,
திருவண்ணாமலை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
வேட்டவலம் பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம், பெரியார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.சுந்தரமூர்த்தி என்பவரின் 11.04.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2023 அன்று பெறப்பட்டு 96/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம், பெரியார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.சுந்தரமூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"வேட்டவலம் பெரியார் தெருவில் அருள்மிகு சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோயில் உள்ளது. மேற்படி கோவிலை தேவாங்கர் சமுதாய மக்கள் நிர்வகித்து வருகிறார்கள். மேற்படி சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் வேட்டவலம் சர்வே எண்.227/3–ல் ஏக்கர் 2.78 நிலம் உள்ளது. மேற்படி சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலம் சர்வே எண்ண்227/3–ல் உள்ள 2.78 ஏக்கர் நிலத்தில் சட்ட விரோதமாக கட்டடங்கள் கட்டியுள்ளனர். இந்த கட்டடங்களில்தான் மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளி இயங்கி வருகிறது. மேற்படி மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளிக் கட்டடங்களுக்கு Planning approval வாங்கவில்லை. வேட்டவலம் பேரூராட்சியிடம் உரிய அனுமதியின்றி மேற்படி கட்டடங்கள் கட்டப்பட்டு அதனை மாணவர்களுக்கு வகுப்பறையாக பயன்படுத்தப்பட்டு வருவது சட்ட விரோதமான செயல் ஆகும். குறிப்பாக Right of Children for free and compulsory

Education (RTE) Act, 2009 சட்டத்தின்படி மாணவர்களை Board exam -க்கு அனுப்புவதற்கு அங்கீகாரம் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டட அனுமதியின்றி சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களைக் கொண்ட பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மேற்படி சட்டம் கூறுகிறது. ஆனால் மேற்படி சட்டவகைகளுக்கும் விதிகளுக்கும் எதிராக வேட்டவலத்தில் இயங்கிவரும் வேட்டவலம் மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளி அது அமைந்துள்ள வேட்டவலம் பேருராட்சியிடம் எந்தவிதமான அனுமதியும் பெறாமல் (கட்டட வரைபட அனுமதி மற்றும் கட்டும் அனுமதி) மேற்படி கட்டடத்தை மேற்படி சர்வே எண்ணில் மூர்த்தி மெட்ரிக் பள்ளிநிர்வாகம் கட்டியுள்ளது. மேலும் Local Directorate of Town and Country Planning (DTCP)-யின் அங்கீகாரம் மற்றும் அனுமதியும் மேற்படி மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு பெறவில்லை. எனவே, Tamilnadu Recognised Private Schools (Regulation) Act,1973, (Tamilnadu Act 29 of 1974) Section -12–ன்படி மேற்படி மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தை உடனடியாக ரத்து செய்ய உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இதுபோன்ற DTCP , Local Panchayat இடமிருந்து உரிய அனுமதியின்றி கட்டப்பட்ட சட்ட விரோத கட்டடங்களுக்கு அனுமதி அளித்ததன் காரணமாகத்தான் கும்பகோணம் பள்ளியில் ஏற்பட்ட விபத்தினால் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்களின் உயிர் பறிபோனது. இவ்வாறு சட்டத்தின்படி முன் கூட்டியே உரிய அதிகார அமைப்பிடமிருந்து உரிய வகையில் அனுமதி பெறாமல் பள்ளிக் கட்டடம் கட்டி அதில் மாணவர்களுக்கு வகுப்பறையாக பயன்படுத்தி வருகிறார்கள். இந்த கட்டடம் உறுதி தன்மையற்றது. எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழுவதற்கு வாய்ப்பு உள்ளது. இதனால் பலநூற்றுக்கணக்கான மாணவர்களின் உயிருக்கு ஆபத்தும் அச்சுறுத்தலும் உள்ளது. எனவே மேற்படி அனுமதியின்றி கட்டடங்கள் கட்டி பயன்படுத்திவரும் மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு வழங்கியுள்ள அங்கீகாரத்தையும் அனுமதியையும் இரத்து செய்யுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளியின் அங்கீகாரத்தை மட்டும் இரத்து செய்வதன் மூலம் இந்தபிரச்சனை முடிவுக்கு வந்துவிடாது. மேற்படி அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இடித்து தரைமட்டமாக்கினால் மட்டுமே இனிவரும் காலங்களில் இதுபோன்ற சட்டவிரோத செயல்களை தடுக்க இயலும். இதற்கு அரசாங்கம் பல்வேறு சட்டங்களை வகுத்துள்ள போதும் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் எந்தவித சட்ட நடவடிக்கையும் இதுகுறித்து எடுக்கவில்லை. மேற்படி பள்ளி நிர்வாகத்திற்கு சாதகமாக உள்நோக்கத்துடன் செயல்பட்டு பள்ளி நிர்வாகத்திற்கு சாதகமாகவும் செயல்பட்டுவருகிறார். இதன் உச்சகட்டமாக செயல் அலுவலர் சுகந்தி அவர்கள் மேற்படி பள்ளி குறித்து வழக்கு நிலுவையில் உள்ளதாக பொய்யான தகவலை கூறி உள்ளார். இதுகுறித்து அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

எனவே G.O.(Ms) No.270 School Education (x2) Department Dated 22.01.2012, மேற்படி அரசு உத்தரவில் பள்ளி கல்விசார்ந்த கட்டடங்கள் கட்டுவதற்கு முன்பு கட்டட வரைபட அனுமதி (Building Plan Approval)–யை உரிய அதிகார அமைப்பிடம் வாங்கிய பின்பு மட்டுமே கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று விதி2(c) of Tamilnadu panchayat Building

Rules – 1997–ல் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு முன் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்களை (unauthorized construction) Tamilnadu District Municipality Act Section–317–ன் கீழ் பள்ளி நிர்வாகத்தின் மீதும் அதற்கு பொறுப்பானவர்கள் மீதும் கிரிமினல் நடவடிக்கை மேற்கொண்டு தண்டனை பெற்றுத்தர வழிவகை செய்யப்பட்டுள்ளதால் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி சட்ட நடவடிக்கையை மேற்படி பள்ளி நிர்வாகம் மீது மேற்கொள்ள உத்தரவிடுமாறும் மேலும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுகள் 338,339–ன்படி அபராதம் விதிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் The Provisions of mulit-storeyed and Public Building Rules – 1973, Tamilnadu District Municipality Act–1920, Tamil panchayat Building rules –1997 ஆகிய சட்டத்தின்படி மேற்படி பள்ளி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே, கனம் அய்யா அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக மேற்படி வேட்டவலத்தில் இயங்கிவரும் மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்து மற்றும் அனுமதியின்றி சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்தி பலநூறு மாணவர்களின் உயிரை காப்பாற்றுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது " என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.04.2023 நாளிட்ட கடிதம் மூலம் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலர் 09.05.2023 நாளிட்ட தனது அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"வேட்டவலம் பேரூராட்சி அறிவிக்கைகளின்படி முதல்வர், மூர்த்தி மெட்ரிகுலேஷன் பள்ளி, பெரியார் தெரு, வேட்டவலம் என்பவருக்கு பள்ளி கட்டடம் நடைபெற்று வரும் அனுமதியற்ற கட்டுமானம் பணி நிறுத்த அறிவிக்கை / கட்டடத்தை காலி செய்யவும் மற்றும் உபயோகத்தை நிறுத்தவும் கோரும் அறிவிக்கை / ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் / உத்தரவு போன்ற ஆவணங்கள் அளிக்க கோரும் 4 அறிவிக்கைகள் அனுப்பப்பட்டதில், முதல்வர், மூர்த்தி மெட்ரிகுலேஷன் பள்ளி, வேட்டவலம் அவர்கள் மேற்படி பள்ளி கட்டடத்திற்கு கட்டட அனுமதி (DTCP) பெற கடந்த 29.03.2021–ல் விண்ணப்பித்துள்ளோம் எனவும், மேலும் அதற்கான தொகை ரூ 1,24,552.50/– செலுத்தப்பட்டு அதற்கான ஆவணம், குத்தகை பத்திரம் ஆகிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

மேலும், கோமளேஸ்வரி கல்வி நிறுவன தலைவர் திரு.கே.பிச்சாண்டி என்பவர் திருவண்ணாமலை மாவட்ட முதன்மை நீதிமன்ற வழக்கு எண். O.S.No.53/2022–ன்படி தேவாங்கர் நல்வாழ்வு அறக்கட்டளை தலைவர் திரு.D.கார்த்திகேயன் மற்றும் செயலாளர் திரு.P.கருணாநிதி ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் மீது 26.08.2022–ல் வழங்கிய தீர்ப்பில் In the Result, This Petition was allowed granting interim injunction restraining the respondents their men agents and servants from in

any manner eviction the petitioner form the suit property except by due process of law till the disposal of the above suit. No costs என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் 05.05.2023–ம் தேதிய அறிவிக்கை அனுப்பப்பட்டதை தொடர்ந்து பள்ளி கட்டட உறுதி தன்மை சான்றுகள், வட்டாட்சியர் சான்று, தீயணைப்பு நிலைய தடையின்மை சான்று, சுகாதார துறை சான்று, முதன்மை கல்வி அலுவலர் அங்கீகார சான்று ஆகிய ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி மூர்த்தி மெட்ரிகுலேஷன் பள்ளி கட்டடத்திற்கு அரசாணை எண். 76–ன்கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தப்பட்டு அனுமதி வழங்கி இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர் அவர்களின் ந.க.எண்.1154/2021/திமலை 20.12.2022 நாளிட்ட கடிதத்தில் கூடுதல் வரன்முறைக்கட்டணம் 1 சதுர.அடிக்கு ரூ 7.50/– வீதம் 19383 சதுர அடி அல்லது 19500 சதுர அடி பரப்பிற்கு ரூ 1,46,250/–ஐ E challan மூலம் வங்கியில் செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து கூடுதல் கட்டணம் ரூ 1,46,250/–ஐ 28.12.2022–ல் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதற்கான சலான் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மூர்த்தி மெட்ரிகுலேஷன் பள்ளி கட்டடங்களுக்கு கட்டட அனுமதி கோரி உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை அவர்களுக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பள்ளிக்கட்டடங்களுக்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு மூலம் கட்டட வரைபட அனுமதி வரப்பெற்றவுடன் உரிய அரசு விதிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் வாயிலாக பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" எனவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலரும், 10.05.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.05.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.S.சுந்தரமூர்த்தி 10.05.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சி பெரியார் தெருவில் அருள்மிகு சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான சர்வே எண் 227/3ல் சட்ட விரோதமாக கட்டப்பட்டுள்ள மூர்த்தி மெட்ரிகுலேஷன் பள்ளி இயங்கி வருகிறது. மேற்கண்ட பள்ளிக் கட்டடங்களுக்கு உரிய கட்டட திட்ட அனுமதி பள்ளி நிர்வாகத்தினரால் பெறப்படவில்லை. இது குறித்து வேட்டவலம் பேரூராட்சியில் புகார் மனுக்கள் அனுப்பியும், வேட்டவலம் பேரூராட்சி அலுவலர்கள் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, சட்ட விரோமாக இயங்கி வரும் மேற்கண்ட பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்தும் மேற்படி சட்டவிரோதமாக இயங்கிவரும் பள்ளிக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட எனது 11.4.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலர் 10.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள, வேட்டவலம் பேரூராட்சியில் அமைந்துள்ள மூர்த்தி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு அனுமதியற்ற கட்டுமானம் பணி நிறுத்த அறிவிக்கை 9.2.2021 அன்று பள்ளி நிர்வாகத்தினருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதே போன்று கட்டடத்தை உபயோகப்படுத்துதல் மற்றும் காலி செய்வது தொடர்பான அறிக்கையும் 2.7.2021 அன்றும் அனுப்பப்பட்டது. மேலும் பள்ளிக் கட்டடத்தின் வரைபட நகலை சமர்ப்பிக்கவும் பள்ளி நிர்வாகத்தினிடம் 9.3.2022 அன்று கோரப்பட்டது. பள்ளி நிர்வாகத்தினர் தங்களது 8.5.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட பள்ளிக் கட்டடத்திற்கு DTCP–யிலிருந்து வரன்முறை பெறும் பொருட்டு அதற்கான கட்டணத் தொகை செலுத்தப்பட்டுள்ளது என தெரிவித்து அதற்கான ஆவணங்களை சமர்ப்பித்திருந்தனர். DTCP அனுமதி பெறாத தனியார் பள்ளிக்கட்டிடத்திற்கு அரசாணை எண்.66, பள்ளிக்கல்வித் துறை, நாள் 03.08.2020ன் படி 01.06.2022க்கு பின்னர் தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துருவில் DTCP அனுமதி ஆணையில் நகர் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்று கட்டிட அனுமதி பெறப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பள்ளிக்கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெற உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம், திருவண்ணாமலை அவர்களுக்கு கட்டிட அனுமதி கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டதால் மேற்கண்ட கட்டடத்தின் மீதான தொடர் நடவடிக்கை ஏதும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 9.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலத்தைச் சேர்ந்த மனுதாரர் திரு.S.சுந்தரமூர்த்தி என்பவர் தனது 11.04.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் வேட்டவலத்தில் சர்வே எண்.227/3–ல் உள்ள 2.78 ஏக்கர் நிலத்தில் அருள்மிகு சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் வேட்டவலம் பேரூராட்சி அனுமதியின்றி மூர்த்தி மெட்ரிக்குலேஷன் பள்ளி முறைகேடாக கட்டப்பட்டு செயல்பட்டு வருவதாக புகாராக தெரிவித்து அப்பள்ளியின் அங்கீகாரம் இரத்து செய்யவும், பள்ளிக் கட்டடங்களை அகற்றவும் ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் பேரூராட்சிக்குட்பட்ட நி.அ.எண்கள்.277/5பி மற்றும் 277/3 ஆகியவற்றில் 11.161.33 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் முறையாக கட்டட அனுமதி பெறாமல், முறைகேடாக "மூர்த்தி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி" நடத்தப்பட்டு வருவதாக பேரூராட்சியில் வரப்பெற்ற புகாரினை தொடர்ந்து பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு கட்டட அனுமதி பெறுவதற்கான வரைபடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் கட்டடத்தினை மூடி சீல் வைக்கும் நடவடிக்கை உட்பட சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56.57 மற்றும் 85–ன் கீழ் 09.02.2021 நாளிடப்பட்ட அறிவிப்பாணை வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலரால் மூர்த்தி மெட்ரிக்குலேசன் பள்ளி முதல்வருக்கு அனுப்பப்பட்டு மற்றும் 02.07.2021, 09.03.2022 மற்றும் 05.05.2023 நாளிட்ட அறிவிக்கைகள் மூலம் பள்ளி முதல்வருக்கு நினைவூட்டுகள் அனுப்பப்பட்டுள்ளதும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

இதற்கிடையில் அரசாணை நிலை (எண்) 66 பள்ளிக்கல்வித் துறை நாள் 03.08.2020–ல் கட்டட வரன்முறைப்படுத்தாத பள்ளிகள் தங்களது கட்டடத்தினை முறைப்படுத்த நகர் மற்றும் ஊரமைப்புத் துறைக்கு கட்டாயமாக விண்ணப்பித்து கட்டட அனுமதி பெறவேண்டும், என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் 01.06.2020 முதல் 31.05.2022 வரை 2 ஆண்டுகளுக்கு தொடர் அங்கீகாரம் வழங்க, மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மூர்த்தி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி முதல்வர் 19.04.2021 நாளிட்ட இணையதள விண்ணப்பத்தின் மூலம் திருவண்ணாமலை மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு சமர்ப்பித்த விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, 15.09.2022 நாளிட்ட கடிதத்தில் சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநரால் மேற்படி பள்ளி கட்டடங்களுக்கு வரன்முறை படுத்தி அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பள்ளி வளாகத்தில் 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட பள்ளி கட்டடங்களுக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட வரன்முறை கட்டணம் போக மீதமுள்ள விடுப்பட்ட கூடுதலாக செலுத்தப்பட வேண்டிய வரன்முறை கட்டணமாக ரூ 1,46,250/– செலுத்தப்பட வேண்டும் என 20.12.2022 நாளிட்ட திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் கடிதத்தில் மூர்த்தி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி முதல்வருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதையும் ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது. பள்ளிக் கட்டடங்களை நகர் ஊரமைப்பு துறையில் வரன்முறை பெறும் பொருட்டு மேற்குறிப்பிட்ட தொகையானது 08.05.2023 அன்று பள்ளி நிர்வாகத்தினரால் செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பேரூராட்சியால் பள்ளிக்கட்டடத்தின் மீதான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

தவிர, திருவண்ணாமலை சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மூர்த்தி மெட்ரிக்குலேசன் பள்ளியினை 01.11.2022 அன்று ஆய்வு செய்து பள்ளிக் கட்டடங்கள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாதார சீர்கேடின்றி உள்ளதாகவும் 24.11.2022 முதல் 1 வருட காலம் செல்லத்தக்க வகையில் சுகாதார சான்றிதழ் (Sanitary Certificate – 2022) வழங்கியுள்ளதையும் மற்றும் வேட்டவலம், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய

அலுவலரால் 02.05.2023 அன்று மேற்படி பள்ளியினை ஆய்வு செய்து, இவ்விடத்தில் மூர்த்தி மெட்ரிக்குலேசன் பள்ளிக்கூடம் தொடர்ந்து செயல்பட அங்கீகாரம் வழங்கிட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நோக்கிலிருந்து தடை ஏதுமில்லை என ஓராண்டிற்கு மட்டும் செல்லத்தக்கவகையில் 03.05.2023 நாளிட்ட தடையின்மைச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 19 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.சுந்தரமூர்த்தி,
பெரியார் தெரு,
வேட்டவலம் – 606 754,
திருவண்ணாமலை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வேட்டவலம் பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம் .

3) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.அர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

22/05/23